வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
FWC
தவணைப் பரீட்சை, மார்ச்- 2017
Term Examination, March - 2017

| தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் | தரம் :- 13 (2017) | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி – I

1) வினைத்திறன் மிக்க தொடர்பாடல் செயன்முறைக்கு எடுத்துக்காட்டாக அமைகின்ற தொடர்பாடல்
   1) அகமுகித்தொடர்பாடல் 2) வெகுசனத்தொடர்பாடல் 3) இருவழித்தொடர்பாடல்
   4) கூட்டுத்தொடர்பாடல் 5) ஆளிடைத் தொடர்பாடல்

2) வாய்மொழித்தொடர்பாடலில் அனுப்புனர், பெறுநர்களுக்கிடையிலான இடைவெளி பற்றிக் கவனம் செலுத்துதல் வேண்டும் எனக்குறிப்பிடப்படுகிறது. அந்தவகையில் நேச இடைவெளியில் உள்ள தூரமாவது
   1) 30 – 60 cm 2) 15 – 20 cm 3) 1.2 – 1.8 cm
   4) 3.6 – 4.8 cm 5) 50 – 60cm

3) குழுத்தொடர்பாடல் தேர்ச்சி நிலைக்கு மிகப் பொருத்தமான கூட்டம்
   1) முன்வைக்கும் திறன், பேச்சுக் கோலப்பயிற்சி
   2) பேச்சுக்கோலப்பயிற்சி , செவிமடுக்கும் திறன்
   3) சொற்களஞ்சிய விருத்தி, முன்வரும்திறன்
   4) பேச்சுக்கோலப்பயிற்சி, சொற்களஞ்சிய விருத்தி
   5) செவிமடுக்கும் திறன், கலந்துரையாடல்

4) ''அபிவிருத்தி என்பது மக்களின் பொருளாதாரம் , கல்வி, சமத்துவநிலை போன்றவற்றை உயர்த்தி வேலையில்லாத் திண்டாட்டத்தையும் வறுமையையும் ஒழிப்பதே'' என்று குறிப்பிட்டவர்
   1) டானியல் லேனர் 2) செனோன் S. வீவர் 3) மகாத்மா காந்தி
   4) டேவிட் K. பொலோ 5) டட்ரி சிர்ஸ்

5) அபிவிருத்தி தொடர்பு ஊடகவியலின் சிறப்பு இயல்புகளாகக் கொள்ளக் கூடியது.
   1) அரசியல் சார்ந்த விடயங்களுக்கு முதன்மையளித்தல்
   2) மேலைத்தேயக் கருத்துக்களை உள்வாங்குதல்
   3) சாதாரண செய்தி அறிக்கைகளாக முன்வைத்தல்
   4) மக்களின் வாழ்வை மேம்படுத்துவதாக இருத்தல்
   5) பொழுதுபோக்கு அம்சங்களை முன்வைத்தல்

6) ''ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியுடன் சமூகஅபிவிருத்தியும் அவசியமானது என கருத்துக்கள் முன்வைத்த நிறுவனம்
   1) சர்வோதய அமைப்பு 2) யுனெஸ்கோ அமைப்பு 3) சார்க் அமைப்பு
   4) சமுர்த்திச் சங்கம் 5) சுகாதார அமைப்பு

7) அபிவிருத்தி சார்ந்த ஊடக உள்ளடக்கங்களை ஒழுங்கமைக்கும்போதும், நடைமுறைப்படுத்தும்போதும் பின்பற்றக்கூடாத அம்சம்
   1) புலனாய்வு ஊடாக அணுகுமுறையை கையாளுதல்
   2) மக்களின் தேவைகள், உணர்வுகளை புரிந்து நடத்தல்
   3) அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு முன்னுரிமை அளித்தல்
   4) அபிவிருத்தி செயற்பாடுகளில் மக்களின் பங்களிப்பிற்கு முன்னுரிமை அளித்தல்
   5) அபிவிருத்தியில் இடம்பெறுகின்ற ஊழல்களை வெளிக்கொண்டு வருதல்

8) மின்கல்வி (E- Learning) பற்றி மிகப்பொருத்தமான கூற்றாக அமைவது.

1) சுற்றாடல், துறையின் வளர்ச்சிக்கு உதவியுள்ளது.
2) ஜனநாயகத்,தன்மையை உருவாக்கியுள்ளது
3) அரசியல் சார்ந்த விடயங்களை மக்களுக்கு தெளிவுபடுத்துகின்றது.
4) தனியாளின் அறிவுகள் பொருளாதார கட்டுருவாக்க சிந்தனைக்கு உதவியுள்ளது.
5 )செய்தி அறிக்கையிடலுக்கு உதவியுள்ளது.

9) அறிவுத்தொகுதி விருத்தி 20 ஆம் நூற்றாண்டில் 50 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அளவு இனி 5 ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்படும் என்பது அறிஞர்களின் கூற்றாக அமைகின்றது. இதற்கு மிகவும் பொருத்தமான காரணமாக அமைவது

1) பொருளாதாரத்துறையில் ஏற்பட்ட மாற்றம்
2) தொழில் நிறுவனக்கட்டமைப்பின் மாற்றம்
3) இணையம் கற்றல் கருவியாக மாறியமை.
4) சமூகத்தில் ஏற்பட்ட மாற்றம்
5) அரசியல் ரீதியாக ஏற்பட்ட மாற்றம்

10) வெகுசனஊடகக் கொள்கைகளைத் தயாரிப்பதற்காகவெகுசனஊடகஅமைச்சரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கற்பனை செய்துகொள்க. இங்கு அவதானிக்கப்படமுடியாததொடர்பாடல் முறை.

1) முறையில் குழு
2) கொள்கைவகுப்புக் குழு
3) செயற்பாட்டுக் குழு
4) குழுத் தொடர்பாடல்
5) முறைசார் குழு

11) தொடர்பு ஊடகங்களின் பணி அல்லாதது.

1) வெகுஜன அபிப்பிராயத்தை ஏற்படுத்தல்.
2) தகவலை சமூகத்திற்கு பரவலாக்கல்.
3) விமர்சனப் பாங்கை வளர்த்தல்.
4) சமூக விழிப்புணர்வை ஊட்டுதல்.
5) சமூகப்பொறுப்புக்களை புறந்தள்ளல்.

12) கிராமியக்கலைகள், நம்பிக்கைகள், சடங்கு போன்ற மரபுவழியான அம்சங்கள் தொடர்புபடும் தொடர்பாடல்.

1) செவிப்புல தொடர்பாடல்
2) எழுத்துமூல தொடர்பாடல்
3) வாய்தொழித்தொடர்பாடல்
4) கட்புலத்தொடர்பாடல்
5) சோடித்தொடர்பாடல்

13) வானொலி ஊடாக அறிவிப்பாளர் தெரிவில் கவனத்தில் கொள்ளப்படும் அம்சங்களாக அமையக்கூடியவை

A) வேகமாக வசனங்களை வெளிப்படுத்தும் ஆற்றல்
B) குரல்வளம்
C) குறுகிய நேரத்தில் குறைந்தளவிலான விடயங்களை வாசிக்கும் ஆற்றல்
D) விபரணத்தை பிரதியின் துணையின்றி முன்வைக்கும் ஆற்றல்
E) பிழையின்றி மொழியை கையாளும் ஆற்றல்

1) BCDE
2) ABDE
3) ACDE
4) CDEB
5) BCDE

14) ஊடக ஆய்வு செயன்முறையில் ஆய்வுக்கான தரவுகளை சேகரித்தல் தொடர்புபட்டமைவது

1) அறிக்கை தயாரிப்புடன்
2) ஆய்வுப்பகுப்பாய்வுகள்
3) ஆய்வுக்கற்கையுடன்
4) ஆய்வுமுறையிலுடன்
5) தரவு முன்வைத்தல்.

15) உயர்தர மூலதனத்துடன் தொடர்புபட்டது.

பின்னூட்டல் பலவீனமானது

கருவி வழியில் முன்னெடுக்கப்படுவது

ஊடக கலாசார செயன்முறையுடன் தொடர்புபட்டது

மேய்கூறிய அம்சங்கள் தொடர்புபடும் தொடர்பாடல் வகை

1) ஆளிடைத்தொடர்பாடல்
2) வெகுசனத்தொடர்பாடல்
3) குழுத்தொடர்பாடல்
4) பூகோளத் தொடர்பாடல்

5) அகமுகித்தொடர்பாடல்

16) பின்வருவனவற்றுள் குறித்தவோர் ஆலோசனை, அபிப்பிராயம் அல்லது சிந்தனையை மிகச் சுருக்கமாக எடுத்துச் சொல்லத்தக்க வினைத்திறன் மிக்க மூலம்

1) நாட்டார் கதைகள்
2) பழமொழிகள்
3) நாட்டார் கவிதைகள்
4) நாட்டார் பாடல்கள்
5) விடுகதைகள்

17) அபிவிருத்திச் செய்தியொன்றில் உள்ளடக்கப்படாத ஒரு விடயம்

1) நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்திச் செய்தியொன்றை இணைத்துக் கொள்ளல்.
2) சமூக சந்தைப்படுத்தல் செய்தியின் தன்மை
3) ஒரு வணிக நோக்கம்
4) தெரிவு செய்யப்பட்ட ஓர் இலக்கு
5) நிச்சயிக்கப்பட்ட ஓர் இலக்குப் பெறுநர் குழு

18) முன்னணியிலுள்ள சமய நிறுவனங்களின் போஸகர்களாக முனையும் பல நபர்களும் அரசியல் அதிகாரத்தில் ஆர்வம் கொண்டவர்களாக அடையாளங் காணப்பட முடிவதன் முக்கிய காரணமாக அமைவது

1) ஆட்சிக்கு சமயவழி நடத்தல் அவசியமானது என்பதன் ஏற்புடைமை
2) அரசியல் அதிகாரங்களில் அடையாளங் காணமுடியாத சக்திகள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்ற நம்பிக்கை
3) அரசியல் அதிகாரக் கட்டமைப்பில் ஆன்மீகத் தலைமைத்துவம் முக்கிய அம்சங்களில் ஒன்றாக இருப்பது
4) மக்களைக் கவரும் தந்திரோபாயமாக ஆன்மீகத்தில் நாட்டமிருப்பதாகக் காட்டும் ஒருவரின் நடத்தை
5) அதிகார மையங்களில் ஓர் அம்சமாக புனிதமான பொருட்களும் சமயத் தலைமையும் நடந்து கொள்ளல்

19) பொதுசனத் தொடர்பு அதிகாரியாக உங்களைக் கருதிக் கொள்க. பின்வரும் சந்தர்ப்பங்களில் உங்களது வேவை தேவையாக உள்ளது.

- அரசாங்கத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்படத் திட்டமிடப்பட்டிருக்கும் புதிய செயற்றிட்டம் பற்றிய விவரமான விளக்கத்தை பொது மக்களுக்கு அளித்தல்.
- மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட ஆர்வம் கொண்டுள்ள இளம் சமூகச் செயற்பாட்டாளர் ஒருவரை அறிமுகப்படுத்துதல்.
- மின்சாரத் தடத்தில் செய்யப்படவிருக்கும் திருத்த வேலை காரணமாக வார இறுதியில் ஏற்படவுள்ள மின்தடை பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்துதல்.

மேற்படி சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான நடவடிக்கைகளின் வரிசைக்கிரமம்

1) ஊடக அறிவித்தல், ஊடக மாநாடு/ கலந்துரையாடல், தனியாள் பிம்ப கட்டமைப்பு
2) ஊடக மாநாடு/ கலந்துரையாடல், ஊடக அறிவித்தல், தனியாள் பிம்ப கட்டமைப்பு
3) ஊடக மாநாடு/ கலந்துரையாடல், தனியாள் பிம்ப கட்டமைப்பு, ஊடக அறிவித்தல்
4) ஊடக அறிவித்தல், தனியாள் பிம்ப கட்டமைப்பு, ஊடக மாநாடு/ கலந்துரையாடல்
5) தனியாள் பிம்ப கட்டமைப்பு, ஊடக மாநாடு/ கலந்துரையாடல், ஊடக அறிவித்தல்

20) வீட்டில் எமது வாழ்வில் புதிய ஊடகம் மேலாதிக்கத்தை எடுத்துக் கொண்டதாக ஒரு குறித்த பேச்சாளர் சுட்டிக் காட்டியிருந்தார். மேற்படி கூற்றிற்கு மிகத் தொடர்பான ஒன்றாக அமைவது

1) புதிய ஊடகப் பயன்பாட்டினால் வன்முறைகள் அதிகரிக்கின்றன.
2) புதிய ஊடகத்தைப் பயன்படுத்துவதற்கான செலவினம் குறைத்துவிட்டது.
3) புதிய ஊடகம் பற்றிய விளங்கறிவு அதிகரிப்பதனால் அவ்வாறான விடயம் நடைபெறுகிறது.
4) புதிய ஊடகத் தொழில்நுட்பத்தின் வலு வேகமாக அதிகரித்துள்ளது.
5) புதிய ஊடகப் பாவனையின் அதிகரிப்பினால் தனியாட்கள் தனிமைப்படுத்தப்படுகிறார்கள்.

21) ஊடகத்தில் இலக்குகள் மற்றும் வகிபங்கை வரைவிலக்கணப்படுத்தும் போது ஊடகக் கோட்பாடு மற்றும் பயன்பாடு பற்றிய இரண்டு மிகப் பிரபலமான அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவையாவன.

1) சமூக அடிப்படை மற்றும் முயற்சியாளர் அடிப்படை அணுகுமுறை
2) தகவல் மற்றும் செல்வாக்கு அணுகுமுறை
3) சமூக மற்றும் தனியாள் அணுகுமுறை
4) பொழுதுபோக்கு மற்றும் செய்தி அணுகுமுறை
5) வணிக நோக்கு மற்றும் பொதுச் சேவை அணுகுமுறை

22) இரண்டு நபர்களுக்கிடையிலான முதலாவது சந்திப்பொன்றில் நிகழும் பொதுத் தொடர்பாடலில் காணக்கிடைக்கக்கூடிய சில அம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A – பொதுவான தகவல்களைப் பகிர்ந்து கொள்ளல்.

B – சிந்தனைகளை வெளிப்படையாக மற்றும் முழுமையான நம்பிக்கையுடன் பரிமாறிக் கொள்ளல்.

C – ஒருவருக்கொருவர் புன்னகையும் தலையை அசைத்துக் கொள்ளல்.

D – தனிப்பட்ட தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல்

மேற்குறிப்பிட்டவற்றிலிருந்து குறித்த தொடர்பாடல் செயன்முறையில் ஆரம்பத்திலிருந்து வரிசைக்கிரமமாக இடம்பெற்றிருக்கக்கூடிய நிகழ்வுகள்

1) A, C, D மற்றும் B
2) B, C, D மற்றும் A
3) C , A, D மற்றும் B
4) C,D.,B மற்றும் A
5) D,B, A மற்றும் C

23) வேறுபட்ட ஊடக விமர்சன அணுகுமுறைகளில் கவனத்திற் கொள்ளப்படும் சில அம்சங்கள் கீழே தரப்படுகின்றன.

A – சம்பவத்தை புதிய நோக்கில் பார்த்தல்
B – பார்வையாளரின் பிரக்ஞையை வளப்படுத்தல்
C – பொழுதுபோக்கு அம்சங்களை ஆய்ந்தறிதல்
D – ஊக்கப்படுத்துதல்

மேலுள்ளவற்றிலிருந்து வரலாற்று அணுகுமுறையுடன் ஒத்திசையக் மூடிய மிகப் பொருத்தமானவையாக அமைவது

1) A, B, C ஆகியன மாத்திரம்
2) A, B, D ஆகியன மாத்திரம்
3) A, C, D ஆகியன மாத்திரம்
4) B, C, D ஆகியன மாத்திரம்
5) A, B, C, D ஆகியன யாவும்

24) மகாவலித்திட்டத்தின் கீழான, இலங்கையில் சமூக வானொலிச்சேவை ஒலிபரப்புக்களை மாத்திரம் கொண்ட தொகுதி

1) கிராந்துரு கோட்டை, மகா இலிப்பள்ளம, கொத்மலை
2) மகாவலி, ஊவா, ருகுணு
3) கிராந்துரு, கோட்டை, ரஜரட்டை, கொத்மலை
4) மகாவலி, புளதிரிராவய, ரஜரட்டை
5) மகா இலிப்பள்ளம, ஊவா, ரஜரட்டை

25) ஊடகப் பண்பாடு பற்றிய வானொலி நிகழ்ச்சியொன்றில் கலந்துரையாடப்பட்ட சில பார்வைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

A - இது மேலைத்தேய பண்பாட்டின் அடிப்படையிலானது

B - இது ஊடகத் தொழில்நுட்பத்துடன் இணைச்சேர்க்கையானது

C – சமூக இயங்கியலுக்கு அமைவாக ஒழுங்குபடுத்தப்பட்டது.

D - இயற்கையான ஒரு செயன்முறை என்பதை விட இது திட்டமிடப்பட்ட ஒரு செயன்முறையாகும்.

மேற்குறித்தவற்றில் உண்மையானவை

1) A, B ஆகியன மாத்திரம்
2) A, C ஆகியன மாத்திரம்
3) A,B, C ஆகியன மாத்திரம்
4) A, B, C, D ஆகியன யாவும்

26) ''செய்மதியினூடாக தொலைக்காட்சியானது முழுஉலகையும் தனது பிடிக்குள் கொண்டு வந்து உலக கிராமத்தை (Globle Village) உருவாக்கிவிடுகிறது'' எனும் கருத்தை முன்வைத்த அறிஞர்

1) மாஷல் மெகலூன்
2) வில்பர் சிராம்
3) லாஸ்வெல்
4) ஒஸ்குட் மற்றும் சிராம்
5) டேவிட். K. பெல்லோ

27) ''பண்பாடு என்பது ஒரு குறித்த சமூகத்தினால் பகிரப்பட்ட மற்றும் ஊடுகடத்தப்பட்ட அங்கத்தவர் கூறுகளான கற்றுக்கொண்ட நடத்தைகள் மற்றும் நடத்தைகளின் பெறுபேறுகளின் உருவமாக அமைவது'' எனக் கூறியவர்

1) கஸ்பர் மாலினோவ்ஸ்சி
2) டெவோ்ட் ரெய்லர்
3) ரால்ப் லின்ரன்
4) ஆனந்த குமாரசுவாமி
5) ரேமண்ட வில்லியம்ஸ்

28) மாற்று ஊடகங்களின் அதிகரித்த பாவனை ஒரு சமூகத்தில் இடம்பெறுவதற்குக் காரணமாவது

1) தீவிரமாகும் அதிகார ஊடகப் போக்குகள்
2) சுதந்திர ஊடகப் போக்குகளின் பெருக்கம்
3) அதிகமாகும் அபிவிருத்தி நோக்கிய ஊடகப் பாவனை
4) புதிய ஊடங்களின் பெருக்கம்
5) எழுத்தறிவில் முன்னேற்றம்

29) ஊடகத் தொடர்பாடலில் (Rural Communication) பாரம்பரிய ஊடகங்களைப் பயன்படுத்துவதன் நன்மை, பெறுநர்களுடனான வினைத்திறன் மிக்க தொடர்பாடலை உறுதிப்படுத்துவதாக அமைந்திருத்தலாகும். பின்வருவனவற்றுள் பெறுநரின் பங்களிப்பை ஊக்கப்படுத்துவதுடன் தொடர்பற்றது எது?

1) பிரதேச மொழிகளையும் அவற்றின் பயன்பாடுகளை புரிந்து கொள்ளல் ஆகும்.
2) இருவழித் தொடர்பாடல் செயன்முறையை நடாத்திச் செல்லுதல் ஆகும்.
3) பெறுநர் கொண்டுள்ள அனுபவக் களத்தைப் ( Field of Experience) புரிந்து கொள்ளல் ஆகும்.
4) பெறுநரின் நம்பிக்கைகள் மற்றும் பெறுமதிகளுடனான முரண்பாட்டைத் தவிர்த்தல் ஆகும்.
5) பெறுநரின் பின்னூட்டத்தை அலட்சியப்படுத்துதல்

30) வெகுசன ஊடகங்கள் கொண்டு வரும் செய்திகள் பல்வேறு இயல்புகளைக் கொண்டிருக்கும். அவை பொருத்தமாக வகைமாற்றம் செய்யப்படுவதும் புரிந்து கொள்ளப்படுவதும் பெறுநரின்

1) ஊடகப் பார்வை நோக்கத் திறனில் தங்கியிருக்கும்.
2) ஊடக விமர்சனத் திறனில் தங்கியிருக்கும்.
3) ஊடக எழுத்தறிவுத் திறனில் தங்கியிருக்கும்.
4) ஊடக மதிப்பீட்டுத் திறனில் தங்கியிருக்கும்.
5) ஊடக ஆய்வுத் திறனில் தங்கியிருக்கும்.

31) பத்திரிகைக்கும் அரசுக்கும் இடையிலான உறவானது பத்திரிகைகளுக்கும் வாசகர்களுக்கும் இடையிலான உறவை விட அதிகம் முக்கியத்துவப்படுத்தப்படுவது

1) பிரசித்தமான பண்பாட்டில்
2) ஹரோல் பீலாஸ்வெல் மாதிரியில்
3) அதிகார ஆதிக்கக் கோட்பாட்டில்
4) வெகுசனத் தொடர்பபாடல் செயன்முறையில்
5) பதிப்புத் தொடர்பாடலில்

32) அபிவிருத்தி தொடர்பாடல் பற்றிய சீன மாதிரியின் அடிப்படையில் நான்கு கட்டங்களை கொண்ட அபிவிருத்தி பின்வருமாறு அமைகிறது

A – அறிதல்
B – பொருள் மதிப்பீடு செய்தல்
C – தொகுப்பாக்கம்
D – நிறைவேற்றுதல்

மேற்குறித்தவற்றில் மிகச் சரியான வரிசைக் கிரமமாக அமையும் பணிகள்

1) C,BD மற்றும் A
2) A,C,B மற்றும் D
3) C,D,A மற்றும் B
4) D,A,B மற்றும் C
5) B,C,D மற்றும் A

33) ஆட்சியாளர்கள் மிக முக்கிய பிரமுகர்கள், கலைஞர்கள் ஆகியோரால் இன்றைய நாட்களில் துரிதமான வெகுசனத் தொடர்பு முறையாக பயன்படுத்தக்கூடிய மிகப் பொருத்தமான வழிமுறை பின்வருவனவற்றுள் எது?
   1) பத்திரிகையறிக்கைகளை வெளியிடல்
   2) சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துதல்
   3) பத்திரிகையாளர் மாநாடுகளை நடாத்துதல்
   4) தொலைக்காட்சி சம்பாஷனை உணர்வுகளை மேற்கொள்ளல்
   5) பொதுக் கூட்டங்களை நடாத்துதல்

34) தற்கால மானுடப் பண்பாட்டுச் சூழலின் சிறப்பு இயல்பாக அமைவது
   1) தேசியமயமாக்கம்
   2) இனமையத்துவம்
   3) பூகோளமையவாக்கம்
   4) பொதுவுடைமையாக்கம்
   5) ஆன்மீகமயமாக்கம்

35) இலத்திரனியல் ஊடகங்களில் நேர அவகாசத்திற்கு ஏற்ப மொழியை சுருக்கமாக பயன்படுத்துதல்
   1) மொழியின் ஏற்புடைமை அடிப்படையில்
   2) மொழியின் மட்டுப்பாட்டின அடிப்படையில்
   3) மொழியின் தாக்கத்தின் அடிப்படையில்
   4) மொழியின் ஏற்புடைமையின்மையின் அடிப்படையில்
   5) மொழியின் பரவல் வீச்சின் அடிப்படையில்

36) மாற்று ஊடகம் (Alternative) தொடர்பான கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
   A – ஜனரஞ்சக கலாசாரத்திற்கு சார்பானது
   B – ஜனரஞ்சக கலாசாரத்திற்கு எதிரானது
   C - இலாப நோக்குக் கொண்டமைந்தது
   D – சமூக மாற்றத்தை மையமாகக் கொண்டு இயங்குதல்
   E – பிரதான ஊடகத்துடன் இணைந்து கொண்டு இயங்குவது
   மேற்படி கூற்றுக்களில் மாற்று ஊடக இயல்பைப் பிரதிபலிப்பன
   1) A யும் C யும் மாத்திரம்
   2) B யும் D யும் மாத்திரம்
   3) C யும் E யும் மாத்திரம்
   4) B யும் D யும் E யும் மாத்திரம்
   5) A யும் C யும் D யும் E யும் மாத்திரம்

37) லெனின், மாக்ஸ், ஏஞ்சல் ஆகியோரின் சிந்தனைகள் அடையாளப்படுத்துவது
   1) சோவியத் பொதுவுடைமைக் கோட்பாட்டை
   2) சமூகப் பொறுப்புக் கோட்பாட்டை
   3) தாராண்மைவாதக் கோட்பாட்டை
   4) சுதந்திரவாதக் கோட்பாட்டை
   5) ஆதிக்க வாதக் கோட்பாட்டை

38) ஊடக தர்மத்தை பேணுவதற்கும், நடைமுறைப்படுத்துவதற்கும் மிகவும் சிறந்த வழிமுறையாக அமையக் கூடியது
   1) சுயஊடக ஒழுக்கக் கோவையைப் பின்பற்றுதல்
   2) ஊடக தணிக்கையை மேற்கொள்ளுதல்
   3) சட்ட ஏற்பாடுகளை விரிவாக்குதல்
   4) ஊடக தர்மத்தை எடுத்துக்கூறல்
   5) ஊடக நிறுவன ரீதியான தர்மத்தைப் பேணுதல்

39) ஆக்க ரீதியான தொடர்பாடல் வடிவங்களில் விபரண எழுத்துக்களும் உள்ளடங்குகின்றன. பின்வருவனவற்றுள் விபரண எழுத்து வடிவத்தின் இயல்பாக அமையாதது
   1) தகவல்களை உள்ளவாறு அறிக்கையிடுவன (Reporting)
   2) உணர்வூட்டுவன (Seelings)
   3) உணர்ச்சியூட்டுவன (Emotions)
   4) உணர்வுப் பெறுமான மூட்டுவன (Sentiments)

5) பெயர்ச்சொற்களை விபரிக்கும் சொற்களை கொண்டமைந்தன. (Ajevtivies)

40) ''ஊடக கலாசாரம் மக்கள் கலாசாரத்தை பின்தள்ளிவிட்டு முனைப்பு பெற்றுள்ளது''
பின்வருவனவற்றுள் கலாசாரப் பரிமாற்ற செயன்முறையின் விளைவு அல்லாதது
1) நாடுகளுக்கிடையில் பரஸ்பரம் ஒத்துழைப்பை உருவாக்கும்
2) இதன் காரணமாக சமூக அபிவிருத்தி உருவாகும்.
3) இதன் காரணமாக முரண்பாடு உருவாகும்.
4) சமூக சகவாழ்வு உருவாகும்
5) சமூக முரண்நிலையில் இழிவு நிலையை உருவாக்கும்.

41) ஊடக விமர்சகர் ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்பு அல்லாதது
1) ஊடகம் பற்றிய குறிப்பிட்ட அளவு அறிவு
2) ஊடகம் பற்றிய பரந்தளவு அறிவு
3) பெறுநர் பற்றிய ஆழ்ந்த அறிவு
4) ஊடகத்தின் மீது நேரடி மறைமுகமாக செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பற்றிய அறிவு
5) ஊடக உள்ளடக்கம் பற்றிய அறிவு

42) ஞாபக செயன்முறையை பிரதிபலிக்காத கூற்று
1) ஞாபக செயன்முறை உளவியல் செயன்முறைக்குட்பட்டது
2) ஞாபகச் செயன்முறை நுண்ணறிவுச் செயன்முறைக்குட்பட்டது
3) ஞாபகத்திற்கு செயல்முறைவழி (Practicalway) உயர்மட்ட செலிமடுத்தல்
4) ஞாபகச் செயல்முறை உயர்மட்ட செவிமடுத்தல் செயன்முறைக்குட்பட்டது
5) ஞாபகச் செயல்முறைக்கு செயல்முறை வழி இழிவுமட்ட செயன்முறைக்குட்பட்டது

43) முரண்பாட்டு முகாமைத்துவம் தொடர்பாக ஒரு தொகுதி மாணவர்கள் வெளிப்படுத்திய கருத்துக்கள் பின்வருமாறு அமைநச்திருந்தன.
ரகு – முரண்பாட்டை வோ்முறையில் ( positive) அணுகுதல்
குமார் - முரண்பாட்டை உடன்பாடான நிலைக்கு இட்டுச் செல்லல்
பாலன் - முரண்பாட்டை மறுத்தலுக்கு உட்படுத்தல்
மாதவன் - முரண்பாட்டினை பயங்கரநிலை அழிவு மட்டம் நோக்கி நகர்த்துதல்
கஜன் - முரண்பாட்டுச் சூழ்நிலையை ஆக்கபூர்வமான நிலைக்கு நகர்த்துதல்
மேற்படி கூற்றுக்களில் முரண்பாட்டு முகாமைத்துவ எண்ணக்கரு தொடர்பில் சரியான இயல்பு நிலைகளை வெளியிட்டவர்கள்
1) ரகு, மற்றும் பாலன்
2) ரகு, பாலன் மற்றம் கஜன்
3) ரகு, குமார் மற்றும் கஜன்
4) குமார், பாலன் மற்றும் மாதவன்
5) குமார், பாலன், கஜன் மற்றும் மாதவன்

44) ஊடக அறிவித்தல் ( Press Release) செயன்முறையின் இயல்பாக கொள்ள முடியாதது
1) அனைத்து ஊடகங்களுக்கும் பொருந்தும்படி தயாரிக்கப்பட்டிருத்தல்
2) அறிவித்தலில் உத்தியோக பூர்வ ஒப்பம் இடப்பட்டு இருத்தல்
3) அறிவித்தலின் உள்ளடக்க தகவல்கள் பொருத்தமானதாக அமைந்திருத்தல்
4) அறிவித்தலின் உள்ளடக்கம் பரந்துபட்ட நோக்கங்களை கொண்டதாக இருத்தல்
5) அறிவித்தலுக்கான தகவல் கவனமாக தெரிவு செய்யப்பட்டிருத்தல்

45) ஊடகக் கழகத்தின் செயற்றிட்ட ஒருங்கமைப்பாளர்களினால் முன்னெடுக்கப்படக்கூடிய ஆக்கச் செயற்றிட்டத்திற்கு எடுத்துக் காட்டுக்களாக அமைவன
1) சுவர்ப்பத்திரிகை வெளியீடு புகைப்படக் கண்காட்சி
2) கவிதை ஆக்கம், செய்தி எழுதுதல்
3) மாணவர் கற்றலுக்காக தொலைக்காட்சியைப் பயன்படுத்துவது தொடர்பான ஆய்வு
4) நல்ல பாடல் ஒன்றை இரசித்தல், நாடகம் ஒன்றை விமர்சித்தல்
5) சமாதானம் தொடர்பான பாடல் தயாரிப்பு காட்டூன் கண்காட்சி

46) மக்கள் தொடர்பு நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதன் நோக்கமாக அமையாதது
1) நிகழ்ச்சித்திட்ட இலாபங்கள் முன்கூட்டியே அறிவித்தல்
2) மக்கள் தொடர்பு நோக்கங்களை நிச்சயித்தல்
3) பௌதீக மானிட வளத் தேவையை கணிப்பிடல்

4) தேவைக்கேற்ப முன்னுரிமைப்பட்டியலை தீர்மானித்தல்
5) நிகழ்ச்சித்திட்டத்தின் பொருத்தப்பாட்டை மதிப்பிடல்

47) செய்தி மூலங்கள் தொடர்பான சில அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

A – செய்தியை உருவாக்குவதில் அவை பங்கெடுக்கின்றன

B – பின்னூட்டச் செயன்முறையை ஆதரிக்கின்றன

C – ஒரு சம்பவம் தொடர்பில் பல்வேறு தகவல்களை வழங்குகின்றன

D – தொடர்பியலாளரின் பண்பாட்டுப் பின்புலத்தை அடையாளம் காண உதவுகின்றன

மேற்குறித்த கூற்றுக்களில் சரியானவை

1) A யும் B யும் மாத்திரம்
2) A யும் C யும் மாத்திரம்
3) A யும் D யும் மாத்திரம்
4) B யும் D யும் மாத்திரம்
5) C யும் D யும் மாத்திரம்

48) இன்றைய நாளில் வாழும் மனிதன் தனது எதிர்கால நடவடிக்கைகளை தனது கடந்த காலங்களைக் கொண்டு திட்டமிட்டுக் கொள்கிறான். ஏனைய விலங்குகளிடம் இல்லாத இந்தத் திறனை மனிதன் பெற்றுக் கொண்ட காரணம்

1) நினைவுபடுத்தலுக்கும் கற்பனைக்கும் இட்டுச் செல்லும் மொழியின் குறியீட்டுத்தன்மை
2) பழங்காலம் முதற்கொண்டு மொழியைக் குறியீட்டு வழியாக மனிதன் கையாண்டமை
3) மொழியை பயன்படுத்தி கொள்ளும் மனிதனுக்கு குறியீட்டு வெளிப்படுத்துகை இலகுவாக அமைந்தமை
4) மனிதப் பரிமாண வளர்ச்சியினூடாக அறிவை அடைந்து கொள்வதற்கு மொழியைப் பயன்படுத்தும் உரிமையை மனிதன் பெற்றுக் கொண்டமை
5) மொழிக்கும் பண்பாட்டிற்கும் இடையிலான உறவு மனிதத் தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படையாக அமைந்தமை

49) ஒரு குறிப்பிட்ட அமைப்பு தனது வளர்ச்சி பற்றி அறிவிப்பதற்காக ஒரு ஊடக மாநாட்டுக்கு அழைப்பு விடுத்திருந்தது. அதற்கான வலுவான தொடர்பாடல் செயன்முறையாக அமைவது

1) ஊடக நிறுவனங்களிலிருந்து வரும் நபர்கள் நன்றாகக் கவனிக்கப்பட வேண்டும்.
2) கலந்துரையாடல் குறித்த இலக்குடன் நடத்தப்படல் வேண்டும்.
3) நேர முகாமைத்துவம் சரியாக இடம்பெற வேண்டும்.
4) தகவல்கள் அடங்கிய ஆவணம் வழங்கப்பட வேண்டும்.
5) கேள்விகளுக்கு நேரம் ஒதுக்கப்பட வேண்டும்.

50) வெகுசன ஊடகங்களின் சமூகப் பொறுப்புணர்வுக் கோட்பாடு (Social Responsibility Theory)

A – ஊடகச் செயக்முறையில் அரசின் தலையீட்டை இழிவளவாக்குகிறது

B – பலவேறு பிரதிநிதித்துவங்களுக்கான வெளியை வழங்ககிறது.

C – தேவைப்படும் போது அரசின் விதிமுறைகளை எதிர்பார்க்கிறது.

E - இலாபம் ஈட்டும் குறிக்கோள் மற்றும் போட்டித் தன்மையை இழிவளவாக்குகிறது

மேற்குறித்த கூற்றுக்களில் சரியானவை

1) A,B ஆகியன மாத்திரம்
2) A,C ஆகியன மாத்திரம்
3) A,B,C ஆகியன மாத்திரம்
4) B,C,D ஆகியன மாத்திரம்
5) A,B,C,D ஆகியன எல்லாம்

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச்- 2017

## Term Examination, March - 2017

| தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் | தரம் :- 13 (2017) | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி – II

01. ''கூட்டுத்தெடர்பாடலானது மனிதன் மிகப் பண்டைய காலத்திலிருந்தே பயன்படுத்துகின்ற பிரசித்தி பெற்றதொரு தொடர்பாடல் முறையாகும்''.

 1. ''கூட்டுத்தொடர்பாடல்'' என்ற எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துக?
 2. கூட்டுத் தெடர்பாடலில் பங்கு பற்றும் குழுக்களை, அவற்றின் நோக்கத்தின் அடிப்படையில் வகைப்படுத்துக?
 3. கூட்டுத்தொடர்பாடல் வெற்றிக்கு பெறுநர்கள் அவசியம் பங்களிக்கக்கூடிய நான்கு வழிமுறைகளை சுருக்கமாக விளக்குக?
 4. சமூகத் தொடர்பாடலில் எழக்கூடிய இடையூறுகளின் இரண்டு பிரதான வகைகளை உதாரணங்களுடன் விளக்குக?

02. ''நேர்முகமான சமூகத் தொடர்பாடல் சூழல் அமைவுக்கு ஒரு நபரின் சரியான உளநிலைமை அத்தோடு வீட்டின் அமைதியும் ஒத்திசைவும் முக்கியமானவையாகும்''.

 1. சாதாரண உளவியல் அழுத்தத்திலிருந்து விடுபடுவதற்கு மேற்கொள்ள வேண்டிய நான்கு நடவடிக்கைகளைப் பெயரிடுக?
 2. உளவியலாளர் சிக்மண்ட் பிராய்ட் (Sigmund Freuid) உளப்பகுப்பின் அடிப்படையில் சுப்பர் ஈகோ (Super Ego) உளநிலையில் ஒருவரிடம் அவதானிக்கப்படக்கூடிய நான்கு இயல்பு நிலைகளைக் குறிப்பிடுக?
 3. உளம் மற்றும் வீட்டின் அமைதியில் பொழுதுபோக்கினால் உண்டாகும் விளைவுகளை மூன்று முக்கிய அம்சங்களின் அடிப்படையில் விவரிக்குக?
 4. ஒரு நிறுவனத்தில் உள்ளக முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக நீங்கள் பணிக்கமர்த்தப்பட்டுள்ளீர்கள் அதன் பொருட்டு நான்கு பொதுசனத் தொடர்பு முறைகளைப் பிரேரித்து அவற்றுள் இரண்டை விவரமாக விளக்குக?

03. ''விழிப்புணர்வு மிக்க செயற்படு அபறுநர் ஒருவரிடம் ஊடக எழுத்தறிவு, ஊடக விமர்சன இயல்புகளை அவதானிக்க முடிகிறது''.

 1. ஊடக எழுத்தறிவு, ஊடக விமர்சனம் ஆகிய எண்ணவாக்கத்திற்கு இடையிலான தொடர்பை அறிமுகம் செய்க?
 2. ஊடக எழுத்தறிவு மிக்க பயனாளிகள் ஊடகங்களின் உள்ளடக்கங்கள் அதாவது அறிக்கையிடல்கள் தொடர்பாக தமது துலங்கல் வெளிப்பாட்டை முன்வைக்கக் கூடிய நான்கு வழிமுறைகளைப் பெயரிடுக?
 3. ஊடக விமர்சன செயன்முறை முன்னெடுக்கப்படும் மூன்று பிரதான அடிப்படைகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?

4. ஊடக விமர்சன போக்கு ஊடக எழுத்தறிவு மிக்க சமூகத்திற்கு எந்த வகையில் முக்கியத்துவம் வகிக்கின்றது என்பதை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக?

04. ‘‘ஆக்க ரீதியான தொடர்பாடல் பிரவேசங்களை தொடர்பாடல் நிலைகளிலும், வெகுசன ஊடக அறிக்கையிடல்களிலும் அவதானிக்க முடிகிறது’’.

1. ஆக்க ரீதியான தொடர்பாடல் வடிவங்கள் நான்கினை எடுத்துக்காட்டி அவற்றில் அவதானிக்கக்கூடிய இரு இயல்புகளைத் தருக?
2. நவீன ஊடகம் என்ற அடிப்படையில் தொடரறா ஊடகத்தின் தனித்துவமான அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக?
3. பத்திரிகை ஒன்றில் நீா் அவதானிக்கக்கூடிய ஆக்க ரீதியிலான அறிக்கையிடல்கள் நான்கினை எடுத்துக்காட்டி அவற்றில் இரண்டை பற்றி சுருக்கமாக விளக்குக?
4. ‘‘நவீன ஊடகங்கள் (new Media ) நாட்டார் ஊடகங்களின் பிரதிபலிப்பே’’ இக்கூற்றினை நீா் ஏற்றுக் கொள்கின்றீரா ?

05. அபிவிருத்திக்கான தொடர்பாடல் எண்ணக்கருவை முதன்முதலில் அறிமுகம் செய்தது யுனெஸ்கோ நிறுவனம் ஆகும்’’.

1. அபிவிருத்தி தொடர்பாடல் பற்றி பிலிப்பைன் நாட்டின் அரச பல்கலைக்கழகத்தினால் 196 களில் முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணம் யாது?
2. அபிவிருத்தி தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு பயன்படுகின்ற மரபுசாா், நவீன தொடர்பு ஊடக வழிமுறைகள் இவ்வியடை தனித் தனியே குறிப்பிடுக?
3. அபிவிருத்திக்கும் வெகுசன ஊடகத்திற்குமான தொடர்பினை விளக்கிய இரண்டு மேலைத்தேய நிபுணர்களின் பெயர் குறிப்பிட்டு, அவர்களில் எவரேனும் ஒருவரது எண்ணக்கருவை இரண்டு விடயங்கள் மூலம் சுருக்கமாக விளக்குக?
4. அபிவிருத்தி திட்டமொன்று தொடர்பில் முடிவுகள் எட்டப்படுவதென்பது பல கட்டங்களைக் கொண்டதாகும். அந்தச் செயன்முறையின் அடிப்படையான நான்கு கட்டங்கள் விபரமாக எடுத்துரைக்க?

06.
1. புதிய ஊடகங்களின் மொழிப் பயன்பாடு தொடர்பில் மூன்று சிறப்பு இயல்புகளைக் குறிப்பிடுக?
2. ஊடக மாநாட்டை ஒழுங்கமையுறு தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நான்கு அம்சங்களைப் பெயரிடுக?
3. வன்முறை செய்திப்பத்திரிகை ஊடகத்தில் எவ்வாறு விவரிக்கப்படுகிறது என்பதை இரண்டு வழிகளில் சுருக்கமாக விளக்குக?
4. பண்பாட்டுப் பரிமாற்றத்தின் முக்கியத்துவத்தை நான்கு அம்சங்களின் அடிப்படையில் விளக்குக?

07. வெகுசனத் தொடர்பும் (Publia Relations) விளம்பரங்களும் வெகுசன ஊடகங்களுடன் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கின்றன.

1. வெகுசநனத் தொடர்புக்கும் விளம்பரங்களுக்கும் .டையிலான பிரதான வேறுபாடு யாது?
2. உள்ளக பொதுசனத் தொடர்பின் (Internal Public Relations) நான்கு வழிமுறைகளைப் பெயரிடுக?
3. பொதுசனத் தொடர்புத் துறையில் செல்லிடத் தொலைபேசிகளின் இரண்டு பயன்களையும் இணையத் தளங்களின் இரண்டு பயன்களையும் சுருக்கமாக விளக்குக?
4. வெளியகப் பொதுசனத் தொடர்பில் புகைப்படங்களைப் பயன்படுத்தக்கூடிய நான்கு வழிமுறைகளை உதாரணங்களுடன் விளக்குக?